*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **05 பிப்ரவரி, 2025**

## <u>பத்திரிகை செய்தி</u>

புதுச்சேரி, மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி & ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இங்கிலாந்தின் லீட்ஸ் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் மூன்றாவது சர்வதேச சுகாதாரம் & ஆராய்ச்சி மாநாடு மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரியில் இன்று (05-03-2025) தொடங்கியது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் குத்துவிளக்கு ஏற்றி மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரியின் வேந்தர் மற்றும் நிறுவனர் திரு. எம்.கே. ராஜகோபாலன், துணைவேந்தர் பேரா. நிஹர் ரஞ்ஜன் பிஸ்வாஸ், மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் பேரா. பிரித்வி சுகுமார், பேரா. மோ தா ஊ மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருந்த மருத்துவப் பேராசிரியர்கள், அறிஞர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

மருத்துவ சேவையின் எல்லைகள் நாளுக்கு நாள் விரிந்து கொண்டே போகிறது. தொற்று நோய்கள் முதல் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் வரை உலகம் தொடர்ச்சியாக பல புதிய மருத்துவ சவால்களை எதிர்கொண்டு வருகிறது. புதிய புதிய கண்டுபிடிப்புகளும் வந்து கொண்டே இருக்கிறது.

மருத்துவச் சேவையில் புதுமை என்பது மருத்துகள் அல்லது அதிநவீன தொழில்நுட்பத்தைக் கண்டுபிடிப்பது மட்டுமே அல்ல. அது மருத்துவச் சேவை வழங்கும் முறையை மாற்றி அமைப்பதாக இருக்க வேண்டும். சாமானிய ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் அது கிடைக்கக் கூடியதாக, குறைந்த செலவில் அனைவருக்கும் பயன் தருவதாக அதை மாற்ற வேண்டும். அதாவது மருத்துவச் சேவை ஒவ்வொரு குடிமகனையும் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும். வது அது குறிக்கும்.

ஆனால், கண்டுபிடிப்புகள் மட்டும் போதாது. அனைத்து சமூகத்தினரும், சமூக-பொருளாதார பின்னணியில் உள்ள மக்களும் இந்த கண்டுபிடிப்புகளால் முன்னேற்றம் அடைய வேண்டும். மருத்துவத் துறையில் ஏற்படும் வளர்ச்சி இதை உறுதி செய்ய வேண்டும், நாம் அதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

உலகம் சந்திக்கும் பல மருத்துவச் சவால்களைச் சந்திக்க இத்தகைய ஒத்துழைப்பு முக்கியமானது. எந்தவொரு தனி நிறுவனமோ, நாடோ அல்லது துறையோ இந்த சவால்களுக்கு தீர்வு சொல்ல முடியாது. மருத்துவ அறிஞர்கள், வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பன்முகத் தன்மை கொண்ட அணுகுமுறையை உருவாக்க வேண்டும்.

மருத்துவத் துறையில் உலகளாவிய ஒத்துழைப்பு என்பது எவ்வாறு நம்ப முடியாத சாதனைகளுக்கு வழிவகுத்தது என்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம். COVID-19 க்கு எதிரான போராட்டத்தில் உலகில் உள்ள நாடுகளில் உள்ள அரசுகள், மருத்துவமனைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் ஒற்றுபட்ட உழைப்பை வெளிப்படுத்தியது. இந்த கூட்டணியால் தடுப்பூசிகள் உடனடியாக கண்டுபிடிக்கப்பட்டு அதனைப் பயன்படுத்தி உலகம் முழுவதும் பல லட்சக் கணக்கான உயிர்களை காப்பாற்ற முடிந்தது. .

COVID தொற்று மருத்துவ சேவையின் போக்கை மாற்றி அமைத்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். அதற்கு புதிய பரிமாணத்தை வழங்கி இருக்கிறது. மருத்துவப் பணியாளர்கள் முன்னணியில் இருந்து உலகத்தை வழிநடத்த வேண்டும் என்பது அதில் ஒன்று. நோய் பாதிப்புகளைத் தடுக்க, குறிப்பாக சர்க்கரை, ரத்த அழுத்தும் போன்ற வாழ்வியல் முறை நோய்கள் (lifestyle diseases) இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மக்களே தங்கள் வாழ்க்கை முறையை மாற்றி அமைக்கத் தொடங்கினார்கள். தங்கள் உடல் நலம் குறித்து அதிக விழிப்புணர்வு அடைந்தார்கள்.

பெரும்பாலான மக்கள் இன்று நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். முழுமையான மருத்துவப் பரிசோதனையைப் பொருத்த மட்டில் கிராமப்புறங்களில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். எப்போதும் வரும் முன் காப்பது நோயைத் தடுப்பது மிகவும் நல்லது.

பொதுவாக ஏழ்மை நிலையில் உள்ள அல்லது நடுத்தர வருமான உள்ள வளர்ந்து வரும் நாடுகளில் தரமான மருத்துவச் சேவை அல்லது உயிர்காக்கும் மருத்துவ சிகிச்சை என்பது ஒரு பெரும் சவாலாகவே இருக்கிறது. எல்லைகளைக் கடந்து பொருளாதார நிலையை கடந்து, மருத்துவக் கண்டுபிடிப்புகள் அனைவருக்கும் பயன்படுவதை நாம் உறுதிசெய்ய வேண்டும். இந்த இடைவெளிகளைக் குறைக்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்.

நாம் மருத்துவத் துறையில் முன்னேற்றம் அடையும் போது அது அனைவருக்கும் கிடைக்க கூடிய வகையில் இருக்கும் வகையில் நம்முடைய முயற்சிகளை ஒருங்கிணைப்பது அவசியம். அந்த தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பல மருத்துவத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறார் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆயுஷ்மான் பாரத் – பாரதப் பிரதமரின் ஜன் ஆரோக்கிய யோஜனா (PMJAY) ஏழை எளிய மக்களுக்கு இலவச சுகாதார காப்பீட்டை வழங்குகிறது.

பாரதப் பிரதமரின் சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY) விபத்து காப்பீட்டை வழங்குகிறது. மிஷன் இந்திர தனுஷ் குழந்தைகளின் நோய்த்தடுப்பு மற்றும் நோய் எதிர்ப்பை சக்தியை உறுதி செய்கிறது. தேசிய சுகாதார இயக்கம் (NHM) கிராமப்புற மற்றும் நகர்ப்புற சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்துகிறது.

புதுச்சேரி ஒரு சிறிய மாநிலம் என்றாலும் இங்கு ஜிப்மர் உள்ளிட்ட ஒன்பது மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றை நாம் சரியாக பயன்படுத்தி புதுச்சேரி மாநிலத்தை ஒரு மருத்துவ மையமாக உருவாக்க முடியும். (Medical Hub). தற்போது விமான நிலையத்தை விரிவுபடுத்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. அதன் பிறது இன்னும் சுமார் 5 ஆண்டுகளில் புதுச்சேரி ஒரு மருத்துவ சேவை மையமாக வளரும் என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது.